20அக்டோ பர் மாதம் 2006

மான்புமிகு திரு. பிரதம மந்திரி

NKC யில் நடத்தப்பட்ட பிரதம மந்திரியின் கூட்டத்தில் பிரதம மந்திரி அவர்கள் அறிவான சமுதாயத்தை உருவாக்க வேண்டும் என்று வலியுறுத்தினார். மேலும் மொழி என்பது கல்வி பயில்வது மற்றும் தகவல் தொடர்பு மட்டுமின்றி இது பல்வேறு கூறுகளை உள்ளடக்கியது. ஆங்கலித்தின் வளாச்சியை நாம் நன்கு புரிந்து கொள்ள வேண்டும். ஏனெனில் உயர்கல்வி, வேலை வாய்ப்புக்கான சாத்தியம், சமுதாய வேலைவாய்ப்பு போன்ற முக்கிய காரணிகளைக் கொண்டது. பள்ளிக் கல்வியை முடித்து வெளிவரும் மாணவர்கள் போதிய ஆங்கில அறிவு இன்மையால் அவர்களால் உலக அளவில் சிறப்பாக செயல் பெற முடியவில்லை. போதிய ஆங்கில கல்வியின்மையால் மாணவர்கள், ஒரு சில தரமான கல்வி நிலையங்களிலிருந்து வரும் மாணவர்களிடம் உலக அளவில் போட்டி போட முடியவில்லை. பெரும்பாலன இதழ்கள், நூல்கள் ஆங்கிலத்தில் வெளிவருவதால் அவர்களால் புரிந்து கொள்ள முடிவதில்லை. இதன் விளைவாக தொழில் நிறுவனங்களில் மட்டுமின்றி அலுவலகப் பணிகளில் அவர்களால் திறம்பட செயல் முடியவில்லை.

வசதியாக வாழ்வதற்கு ஆங்கில அறிவு மிக அவசியமானது என்பது நம் நாட்டவர் அறிந்ததே இந்தியாவில் உள்ள நடுத்தர வர்க்கம் தமது சக்திக்கு மேற்ப்பட்ட பணத்தைச் செலவு செய்து ஆங்கிலக் கல்வியை குழந்தைக்கு அளிக்க வேண்டியுள்ளது. பெற்றோர்கள் தங்களுடைய குழந்தைகளுக்கு ஆங்கில கல்விக்கு முக்கியத்தும் கொடுப்பதால் அவர்களுடைய குடும்ப நலம் பெரிதும் பாதிக்கபடுகிறது. பெரும்பாலான இந்திய மக்களுக்குத் தேவையான குடும்ப வருமானம் கிடையாது. பொது மக்களுடைய வருமானத்தைத் பெருக்குவதன் மூலம் இதை நிவர்த்தி செய்யலாம் என்று நம்புகிறோம்.

இந்தியாவில் நூறு வருடங்களுக்கு மேலாக ஆங்கிலக் கல்வி நமது கல்வியின் ஒரு அங்கமாக இருந்து வருகிறது. அப்படி இருந்தும் இன்று வரை ஆங்கிலம் இளைய சமுதாயத்தை எட்ட முடியவில்லை. இந்தியாவில் பெரும்பாலான மக்கள் ஆங்கிலத்தை 1 சதவீதம் கூட இரண்டாம் மொழியாகப் படிக்கவில்லை.

இதை விரைவில் தீர்க்ககூடியது இல்லை. ஆங்கிலக் கல்வியை அனைவருக்கும் பயிற்றுவிப்பதற்குத் தக்க தருணம் வந்துவிட்டது என்று NKC நம்புகிறது. ஆங்கில அறிவை பெறுவதன் மூலமே தனி நபர் வாழ்க்கையும் சமுதாய வாழ்வும் முன்னேற்றம் பெறும் என்று நம்புகிறோம். மாணவர்கள் 12 ஆம் வகுப்பு படித்ததைக் கொண்டு உயர்கல்வி பெறகிறார்கள், உயர்கல்வி பெற்றவர்களே வேலைவாய்ப்பைப் பெறுகிறார்கள்

அரசின் பல்வேறுதுறையுடன் முக்கியமாக கல்விநிறுவனம், ஊடகம் மற்றும் தொழில் துறைகளுடன் NKC கலந்தாய்வு நடத்தியது. இது மட்டுமின்றி மாநில முதல்வர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், மருத்துவர்கள், வழக்கறிஞர்கள், மற்றும் சட்ட ஒழுங்கு அமைப்பு போன்றவர்களுடன் கலந்தாய்வு செய்தது. இதன் விளைவாக ஆங்கிலத்தைப் பயன்படுத்தி இந்தியாவை வளர்க்க வேண்டும் என்று வலியுறுத்தியது.

NKC ஒரு பணிக்குழுவை நிறுவியது. அந்தக் குழுவின் அறிக்கை ஒரு தூண்டுகோளாக அமைந்தது.

ஆங்கிலக் கல்வியைத் தாய் மொழியுடன் முதல் வகுப்பிலிருந்து அறிமுக்கப்படுத்த வேண்டும் என்று NKC கருதுகிறது. ஆங்கிலம் கற்பித்தல் இலக்கணம் மற்றும் அதில்இடம் பெற்றிருக்கக்கூடிய விதிமுறைகளை விடுத்து பொருளை உணர்ந்து கற்கும் விதத்தில் அமைய வேண்டும்.

ஒன்பது மாநிலங்கள் (இதில் ஆறு வடகிழக்கு மாநிலங்கள்) மற்றும் யூனியன் பிரதேசங்களில் முதல் வகுப்பிலிருந்து ஆங்கிலம் கட்டாயப்பாடமாக அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. அது போன்று மேலும் 12 மாநிலங்கள் மற்றும் 3 யூனியன் பிரதேசங்களில் ஆங்கிலக் கல்வி பல்வேறு நிலைகளில் கட்டாயமாக அறிமுகப்படுத்தப்பட்டு இருந்தாலும் இதன் செயல்பாட்டு முறை வேகம் குறைந்தே காணப்படுகிறது. பயிற்றுவிக்கும் முறையும் தரமானதாக இல்லை. ஏனெனில் இதற்குத் தேவைப்டும் ஆசிரியர்களும் கல்விப் பயிற்றுக் கருவிகளும் போதியயதாகவும் பொருத்தமானதாகவும் இல்லை. தேசிய அளவில் ஆங்கிலக் கல்வியை அடிப்படையிலிருந்து மாற்றியமைக்க வேண்டும். NKC ன் பரிந்துரை என்னவெனில் ஆங்கிலக் கல்வியை முதல் வகுப்பிலிருந்து பயிற்றுவிக்கவேண்டும். அதே நேரம் ஆங்கிலம் ஒரு பாடமாக பாடத்திட்டத்துடன் இணைந்திருக்கவேண்டும்

மொழிகற்றல் என்பது தனிப்பட்ட ஒன்று அல்ல இதுவும்பாடத்திட்டத்துடன் இணைந்ததே. மூன்றாம் வகிப்பிலிருந்து ஆங்கிலத்தை மொழிப் பாடமாக அறிமுகப்படுத்தப்பட வேண்டும். அல்லாமல் முக்கிய பாடமாக கருத வேண்டும். அவர்கள் தேர்ந்தெடுக்கும் பாடம் அந்தப் பள்ளிகளே தேர்ந் தெடுத்துக்கொள்ளலாம். அதனை ஆங்கில நூல்கள் மற்றும் ஆசிரியர்களின் எண்ணிக்கையைக் கொண்டு முடிவு செய்து கொள்ளலாம். இது பன்மொழி கற்கும் பள்ளிகளை உருவாக்க வாய்ப்பாக அமையும் அது மட்டுமின்றி ஆங்கில வழி பள்ளிகளுக்கும், மாநில மொழி வழிக் கல்விக்கும் இருக்கும் வேறுபாடு களைய வாய்ப்பிருக்கிறது.

கல்வி கற்றல் மற்றும் கற்பித்தல் முறையைச் சூழலுக்கு ஏற்றவாறும், அன்றாட நடைமுறைக்கு ஏற்றவாறும் அமைத்தல் வேண்டும். மேலும் கொடுக்கப்பட்ட பணியை அதன் இலக்கை மட்டும் நோக்கமாக அல்லாமல் தரத்தின்

அடிப்படையில் கல்வி கற்றல் கற்பித்தல் கருவிகள் அமைக்க வேண்டும். NTS மூலமாக தரமான ஆசிரியர்களைத் தேர்வு செய்ய வேண்டும்.

ஆங்கில ஆசிரியர்களின் தேவையைப் பூர்த்தி செய்ய ஆங்கிலத்தில் நல்ல புலமை வாய்ந்த பட்டதாரிகளைச் சாதாரண ஆசிரியர் பயிற்சித் தகுதி இல்லாவிட்டாலும் அவர்களை வேலையில் அமர்த்தலாம். அவ்வாறு தேர்ந்தெடுக்கப்படுபவர்கள் நேசனல் டெஸ்டிங் சர்வீஸ் நடத்தும் தேர்வுகளில் வெற்றிபெற்றவர்களாக இருக்கவேண்டும். இவர்களுக்குத் தேவைக்கேற்ப குறுகிய கால பயிற்சி அளிக்கப்படவேண்டும். நான்கு மில்லியன் பள்ளி ஆசிரியர்கள் தனது பாடத்தில் நல்ல அறிவு இல்லாமல் இருக்கின்றார்கள். குறிப்பாக தொடக்கக் கல்வி ஆசிரியர்கள் இவர்களுக்கு விடுமுறைகாலப் பயிற்சி மற்றும் குறுகியக் கால பயிற்சி அளிக்க வேண்டும். அதிகமான ஆசிரியர் பயிற்சி மையங்கள் ஆசிரியர்களுக்கான தேவையை பூர்த்தி செய்வதில்லை. எனவே பாடத்திட்டத்தை அடிப்படையாகக் கொண்டு ஆசிரியர் பயிற்சி வேலையில் இருக்கும் போதும் வேலைக்கு முன்பும் கொடுக்கும் பயிற்சி முறை முழுவதுமாக மாற்றி அமைக்கப்பட வேண்டும்.

பல்வேறு வகையான மொழிகளுக்கேற்ப பல வகையான ஆங்கிலப் பாடநூல்கள் தயாரிக்கப்படவேண்டும். மாணவர்களின் தகுதிக்கேற்ப பாடநூல்களின் தரம் அமையவேண்டும். எனவே ஒரு தகுதிவாய்ந்த குழு 1 முதல் 12 வகுப்புவரை ஆங்கிலத்தைச் சிறந்த முறையில் கற்பிக்க பாடநூல்கள் உருவாக்கம் அமைக்கப்பட வேண்டும். இது ஒரு முன்மாதிரியாகவும் மற்றும் இணையத்தில் மிக இலகுவாக கிடைக்கும் வகையிலும் இருத்தல் வேண்டும். மாநிலத்தில் நூல்கள் உருவாக்கத்திற்கு மாநில கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சிக் கழகம் பொறுப்புடையதாகவும் இந்த நூல்கள் எதிர்காலத்தில் மாற்றத்தக்கவையாகவும் இருத்தல் வேண்டும். இதனை மேலும் சிறப்பாக செய்ய சமூக, கலாச்சார ஆர்வளர்கள் பாடநூல் உருவாக்கத்தில் ஈடுபத்தப்பட வேண்டும்.

ஒரு மொழி கற்றுக்கொள்ளுதல் என்பது சொல்லிக் கொடுப்பதினால் மட்டும் வந்து விடுவில்லை. அது சுற்று சூழலில் இருந்தும் வருகின்றது. எனவே ஒரு வகுப்பறையில் தேவையான ஒலி-ஒளி உபகரணங்கள் மற்றும் அச்சிட்ட நூல்களின் தேவை மிக முக்கியமானதாகும். ஒவ்வொரு வகுப்பிலும் பாடத்திட்டத்திற்கும் மாணவர்களின் வயதிற்கும் ஏற்றவாறு நூல்கள், நாளிதழ்கள், வார இதழ்கள். வரைபடங்களுடன் கூடிய நூலகம் என்பது இன்றியமைத்தாகும். மொழி கற்பித்தலுக்கான வாய்ப்பை வகுப்பறைக்கு வெளியேயும் மாணவர்களுக்கு வழங்க வேண்டும். வானொலி மற்றும் தொலைக்காட்சி மூலம் ஆங்கிலம் கற்பதற்கு வழிகை செய்ய வேண்டும் மொழிமன்றம் ஏற்படுத்தி அறிவை வளர்க்கவும் ஆங்கிலப் புலமை பெறவும் வழிவகை செய்யலாம். ஆங்கில மொழிகற்பிப்பதற்குப் பொருளாதார வசதி அதாவது ஆசிரியர்களுக்கும் பாடம் தொடர்பான மற்ற செலவினங்களுக்கும் செய்ய வேண்டியது மிகவும் அவசியமாகின்றது.

மாநில அரசாங்கமும் இச்செலவினங்களில் தங்களை ஈடுபடுத்திக்கொள்ளவேண்டும். தேசிய அறிவுசார் ஆணையத்தின் திட்டப்படி

பிரதம மந்திரி மாநில நிர்வாக தேசியவளர்ச்சி கவுன்சில் கூட்டத்தில் தாய்மொழியுடன் முதல் வகுப்பில் இருந்து ஆங்கிலத்தை எவ்வாறு கற்பிப்பது என்பது தொடர்பான தேசிய திட்டத்தை கலந்தாலோசித்து முன்வைப்பார்கள் இதன் மூலம் 12 ஆண்டுகளிலும் பள்ளிப்படிப்பை முடிக்கின்ற மாணவன் குறைந்தது. இரண்டுமொழிகளில் புலமை பெற்றவராக இருத்தல் வேண்டும்

நன்றி

சேம் பிட்ரோடா

தலைவர்

தேசிய அறிவுசார் ஆணையம்

திரு. மான்டேக் சிங் அலுவாலியா, தலைவர், திட்டக்கமிசன்